# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்

முன்னிலை : திரு. T. கோகுலகிருஷ்ணன், B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2024–ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆனி திங்கள் 05–ம் நாள்

MP. No. 03 / 2024 in STC. No. 1042 / 2023

| | | |
|---|---|---|
| சிவபாலன் (வயது 47/2024),<br>த/பெ. தர்மலிங்கம்,<br>கதவு எண்.93/2A, கமலம்,<br>அப்பார்ட்மெண்ட்,<br>பெரியப்பட்டி ரோடு,<br>சந்தைப்பேட்டைபுதூர்,<br>நாமக்கல் வட்டம் மற்றும் மாவட்டம். | – | மனுதாரர்/<br>குற்றமுறையீட்டாளர் |

// எதிராக //

| | | |
|---|---|---|
| வேலுமணி (வயது 40/2024),<br>த/பெ. அருணாச்சலம்,<br>கதவு எண்.14/75, கெம்மம்பட்டி,<br>கதிராநல்லூர்,<br>நாமக்கல் வட்டம்,<br>நாமக்கல் மாவட்டம். | – | எதிர்மனுதாரர்/<br>எதிரி |

இம்மனுவானது கடந்த 26.03.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 10.06.2024–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. Pazha சங்கர், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. இளங்கோவன், B.Sc., B.L., அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உ த் த ர வு

இம்மனுவானது மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்துள்ள தனிப்புகார் மனுவில் சில திருத்தங்களை செய்வதற்காக அனுமதிக்க வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன்கீழ் தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள தனிப்புகார் மனுவில் தவறுதலாக எதிரியின் முகவரியானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் ரோடு, ராஜாஜி நகர், கதவு எண்.5/296 என்பதற்கு பதிலாக நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கதிராநல்லூர், கெம்மம்பட்டி, கதவு எண்.14/75 என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிழையானது தட்டச்சு பிழையாகும். எனவே, மேற்படி எதிரியின் முகவரியை நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் ரோடு, ராஜாஜி நகர், கதவு எண்.5/296 என திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர் உரையின் சுருக்கம் :**

மனுதாரரின் மனு சுத்த பொய்யும் மோசடியுமானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, உடனடியாக நிராகரிக்கத்தக்கது என்றும், மனுதாரர் கேட்டுள்ள திருத்தல் மனுவானது அனுமதிக்க இயலாது என்றும், எதிர்மனுதாரர் முகவரியின் தனிப் புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை முழுவதுமாக திருத்தக்கோருவது ஏற்புடையது அல்ல என்றும், மனுதாரர் திருத்தம் கோருவது போல் முகவரியின் முழுவதையும் திருத்ம் செய்ய இயலாது, அது தட்டச்சு பிழையும் அல்ல என்றும், மனுதாரரின் இம்மனுவானது முழுவதுமாக நிராகரிக்கத்தக்கது எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரை கேட்கப்பட்டது
மனு, எதிர் உரை இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டது.
இம்மனுவில், தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்
இறுதியாக

3. மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா ?

**4. தீ ர் வு :**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள தனிப்புகார் மனுவில் எதிரியின் முகவரி முழுவதும் திருத்தம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ளார். மனுதாரர் எதிர்மனுதாரருக்கு தொகை எதுவும் கடனாக கொடுக்காத காரணத்தினால்தான் அவசரகதியில் பொய்யான ஒரு வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றும், திருத்தம் செய்ய கோரியுள்ள விவரங்களை புகார்தாரர் வேண்டுமென்றே அசல் புகார் மனுவில் சேர்க்காமல் விட்டுவிட்டு தற்பொழுது இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன்கீழ் தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கானது புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் தவறுதலாக எதிரியின் முகவரியானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் ரோடு, ராஜாஜி நகர், கதவு எண்.5/296 என்பதற்கு பதிலாக நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கதிராநல்லூர், கெம்மம்பட்டி, கதவு எண்.14/75 என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முகவரியை திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரருக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. அதனால் இம்மனுவை அனுமதித்து அசல் புகார் மனுவில் திருத்தம் செய்துகொள்ள புகார்தாரரை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

6. முடிவில் இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சுருக்கு சொல்லச் சொல்ல அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்./–T. கோகுலகிருஷ்ணன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

பின் இணைப்பு : இல்லை

(ஒம்./–T. கோகுலகிருஷ்ணன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.